REG. NO. M. 2997.

தனிப்பிரதி அணா 1

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

RÉPUBLIQUE FRANÇAISE
LIBERTÉ.—ÉGALITÉ.—FRATERNITÉ.

PULSATE ET APERIETUR VOBIS

# VITTAGAM

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

LE RÉDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI.
Tamil Pandit
Jaffna
CEYLON.

# வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOU AYER
MADAM, NO. 2,
Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.
குறள்.

காரியாலயம் :—
அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி,
நெம்பர் 2,
புதுவை.

VOL. II. | புதுவை, பவ ஹூ தை மீ கஅ உ (31—1—35) | NO. 10.

## திருமந்திரம்.

பரிசன வேதி பரிசித்த தெல்லாம்
வரிசை தரும்பொன் வகையாகு மாபோற்
குருபரி சித்த குவலய மெல்லாந்
திரிமலந் தீர்ந்து சிவகதி யாமே.

தானே யெனநின்ற சற்குரு சந்நிதி
தானே யெனநின்ற தன்மை வெளிப்படிற்
றானே தனைப்பெற வேண்டுஞ் சதுர்பெற
வூனே யெனநினைந் தோர்ந்துகோ ளுன்னிலே.

வரும்வழி போம்வழி மாயா வழியைக்
கருவழி கண்டவர் காணு வழியைப்
பெரும்வழி யாநந்தி பேசும் வழியைக்
குருவழி யேசென்று கூடலு மாமே.

ஒளியை யொளிசெய்து வோமென் றெழுப்பி
வளியை வளிசெய்து வாய்த்திட வாங்கி
வொளியை வெளிசெய்து மேலெழ வைத்துத்
தெளியத் தெளியுஞ் சிவபதந் தானே.

நின்று மிருந்துங் கிடந்து நிமலனை
யொன்றும் பொருள்க ளுரைப்பவ ராகிலும்
வென்றைம் புலனும் விரைந்து பிணக்கறுத்
தொன்று யுணரு மொருவனு மாமே.

ஏற்ற மிரண்டுள வேழு துரவுள
மூத்தா னிறைக்க விளையான் படுத்தநீர்
பாத்தியிற் பாயாது பாழ்ப்பாய்ந்து போயிடிற்
கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ளாமே.

உ
திருவருள் துணை.

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே.

[ திருவாசகம் ]

# வித்தகம்

புதுவை,
பவ ஹு தை மீ 18 உ

## சுழினை.

சுழினை என்றால் என்னை? சுழி முனை என்பதே சுழினை என மருவியது என்பர். இடைகலை பின்கலை சுழிமுனை என நாடிகள் மூன்று என்ப. இடைகலை என்பது இடநாசியிலும் பின்கலை என்பது வலநாசியிலும் வழங்கும் சுவாசம் எனப்படும். இவ் இரண்டு நாடிகளும் கீழ் இருந்து மேலாகச் சென்று கத்தரிக்கோல் மாறலாக நின்று சுழிக்கும் இடமே சுழிமுனை—சுழினை எனப்படுவது. இரண்டு நாடிகளும் சுழியில் நிற்கும் போது—சுழிக்கும் போது இரண்டு நாசித் துவாரங்கள் வழியாக சுவாசம் சிறிதாக வழங்கும். நிறை முறை தழுவி நிற்போர்க்குச் சுவாசம் லேசாக இயங்கும். நிறை முறை இல்லார்க்கு மனம் என்னும் வாசி அவச் சலனம் அடைதலால் சுவாசம் அளவு கடந்து இயங்கும். இதனால் பிணி மூப்புச் சாக்காடும் பிறவியும் உளவாகின்றன. இடை பின்கலை என்பன சந்திரகலை சூரியகலை எனப்படும். சந்திரகலை பதினாறு எனவும் சூரியகலை பன்னிரண்டு எனவும் கூறுப. இவை தம் அளவில் குறுகிச் சமநிறை பெற்றுழி நித்தியத்துவம் உண்டு என்பது வேத உண்மை.

### திருமந்திரம்.

மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுளே
வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம்
நான்றவிழ் முட்டை. யிரண்டையுங் கட்டி
[யிட்
டேன்றி யிருக்க உடலழி யாதே.

(ஷை 3-ம் தந். சரீரசித்தி உபாயம் செ. 5.)

பாம்பு=வாசி, வாயு. இரண்டு எட்டு =உகரமும் அகரமும். இவையே இடைகலை பின்கலைகளாம். நான்று அவிழ் முட்டை இரண்டையும் கட்டுதல்=வியாபகம் பெற்று விரிந்து ஏற்றிழி வடைந்து — அளவு கடந்து இயங்குகின்ற இடை பின்கலை என்னும் இரண்டையும் நிறை முறையான சாதகங்களால் சமப்படுத்துதல். பாம்பு இரண்டு எட்டு முட்டை என்பன பரிபாஷை. ஊன்றி இருத்தல்—கபாலம் என்னும் சுழினையில் ஏறிய இடை பின்கலைகள் சமப்படுதலால்—மனமும் மதியும் ஒன்றுதலால் அவரோகணம் பெறாது ஆரோகணம் பெறுதல். இதனால் பிணி மூப்புச் சாக்காடும் பிறவியும் ஒழிந்து நித்தியத்துவம் உளதாகும் என்பார் "உடல் அழியாதே" என்றார். பின் வரும் பிரமாணங்களும் இவ்வுண்மையை நன்று வலியுறுத்துதல் கண்டு கொள்க.

### திருமந்திரம்.

ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே.

(ஷை 3-ம் தந். அட்டாங்கயோகம் செ. 23.)

### சிவவாக்கியர்.

உருத்தரித்த நாடியி லொடுங்குகின்ற வாயுவைக்
[வைக்
கருத்தினா லிருத்தியே கபாலமேற்ற வல்லி
[ரேல்
விருத்தரும் பாலராவர் மேனியுஞ்சிவந்
[திடும்
அருட்டரித்த நாதர்பாதம்அம்மைபாத
[முண்மையே.

(ஷை செ. 5)

கபாலம் என்பதே சுழினை யாகும். புருவத்து இடை வெளி எனப்படுவதும் இது. "புருவத்து இடை வெளி" என்பது கபாலத்தையே கௌணமாக உணர்த்துகின்றது. நிட்டையாளர் புருவ மத்தியை மூக்கு நுனி எனவும் பேசுவர். மூக்கு நுனி என்றால் வாயின் மேல் நிற்கும் நுனி மூக்கு எனக் கருதுவர் உலகோர். தியான சேபங்கள் புரியும் உலகோர் பலர் வாயின் மேல் நிற்கும் நுனி மூக்கையே நோக்குவர். உலக மாக்களுக்கு அவர் தம் பக்குவத்துக்கு ஏற்ற சுழினை இதுவேயாம். மூக்கு நுனி என்பது வாய்மையில் புருவத்து இடை வெளியாகும். இது கபாலத்தையே குறிக்கும். யோகாப்பியாசம் செய்பவர்—சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர் — உபாசக நிட்டையாளர் புருவத்து இடைக்கு மேற் செல்ல மாட்டார். அதுவே சுழினை எனப் பாவனை செய்வர். இந் நிலையில் நிற்போர் அசுத்த ஒளியையே கண்டு அதனையே அமல ஒளி என அமைபவராதலால் மேற் சென்று அமல ஒளி கண்டு உடலுயிரை அமலமாக்கி நித்தியத்தும் பெறும் நெறியை அறிய மாட்டார். சுழினையும் பக்குவத்துக்கு ஏற்ப — படியேற்ற முறைக்கு

ஏற்பப் பலவகைப்படும். மெய்யடியார்க்கு உரிய இயற்கைச் சுழினை உபாசக நிட்டையாளர் பாவனை செய்யும் சுழினை அன்று. மற்று அதன் பெற்றிதான் என்னையோ? எனின், சிறிது கூறுதும் :-

"பாரடா புருவமத்தி யதென்றுக்கால்
பரப்பிரம மானதொரு அண்டஉச்சி
........................................"

என அருளிச் செய்தார் புசுண்ட மஹர்ஷி. இதனால் பெறப்படுவது யாது? துரியாதீத அதீதச் சுழினை, பிரம்ம குரு சுழினை, குரு நந்தி சுழினை, ஐம்பொறியாகியஐம்பூத ஆக்கச் சுழினை ஆதி பிரணவச் சுழினை, மகா குண்டலியை அடிமை கொண்ட சுழினை, அக்குண்டலியால் சர்வ வியாபகமும் படைக்கும் சுழினை, அலி சுழினை, அப்பால் தாவி அறிதற்கு மிக அரிதாகிய அகண்டாகார அமல ஐகாரச் சுழினை, சோம சூரிய உபய சமரச அக்கினிச் சுழினை, அதீதாதீத மஹா அகண்ட நிராலம்ப நிறை சூன்ய சர்வ பரிபூரண சகள நிட்கள வியாப்பிய வியாபகம் அனைத்துமாய் விளங்கும் மையச் சுழினை, உபய ஆக்கச் சுழினை, முதலியன வாகும். ஆழ்ந்து உணருங்கால் அமலப் படியேற்றம் பெறுவார்க்கு உரிய சுழினை இயல்பு இவ்வாறே விரியும். அப்பன் வாக்கியங்களாகிய உலவாக் கிழியின் நீர்மை இதுவே என அறிதற்பாற்று.

"உச்சிக்கு நேரே உண்ணாக்கு மேலாக
வைச்ச விளக்கு எரியுதடி.................."

என்றனர் சித்து மூர்த்தி ஒருவர்.

ஆதலால் தத்துவப் பெரியார்க் குரிய சுழினைக்கும் உபாசக நிட்டையாளர் பாவனை செய்யும் சுழினைக்கும் இடையீடு அளவிடற்கு அரிதாகும். இன்னோரன்ன வேத உண்மைகள் எல்லாம் பன்னெடுங் காலமாய்ப் பலர்க்கும் மறை பொருளாயினமையே உலகோர் மெய்யடியாராகிய தத்துவப் பெரியார் நீர்மையை அறிய முடியாது அவரையும் வித்துவப் பெரியார் — உபாசக நிட்டையாளர் என்பவரோடு ஒப்ப மதித்துச் சிவாபராதிகள் ஆதற்குக் காரண மாயிற்று என்பது வெள்ளிடை மலையாம்.

"வித்தகம்"
சந்தா நேயர்க்கு
**விண்ணப்பம்.**

எமது இரண்டாம் வருட "வித்தகம்" சந்தா நேயர்களுக்கு அடுத்த இலக்கம் தொடக்கமாக வி. பி. போஸ்டில் அனுப்பப்படும். ஆதலால் வி. பி. கமிஷன் முதலிய செலவு ஏற்படாவண்ணம் ஒவ்வொருவரும் தம் தம் சந்தா பணத்தைக் கீழே காணப்படும் விலாசத்துக்கு முன்னுக பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர், அல்லது மணியார்டர் மூலம் அனுப்பி வைக்கும்படி வணக்கத்தோடு வேண்டப்படுகின்றனர்.

குறிப்பு:- சிலோன் போஸ்டல் ஆர்டர் புதுவை தபாலாபீசில் எடுத்துக் கொள்ளப் படமாட்டாது.

ரா. நாகரத்தினம்.
வித்தகம் ஆபீஸ்,
புதுச்சேரி.
Fr. India.

## திருமந்திரம்.

நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரம னிருந்திடம்
சிற்றம் பலமென்று தேர்ந்துகொண் டேனே

(ஷை 9-ம் தந். 13-வது அற்புதக் கூத்து செ. 9)

என அருளிச் செய்தார் தத்துவப் பெரியாராகிய எம் அண்ணல் திருமூலர். இதனால் "புருவத்து இடைவெளி" கபாலமே என்பதும் ஆண்டுள்ளதே சிற்றம்பலம் என்பதும் வெள்ளிடையாம். இதுவே கண் மணியின் உண்மணியாகிய பரமன் இருக்கும் இடம். ஒளி விடு மந்திரம் — அமல ஐகாரம் — அமல பஞ்சகாரம் — பஞ்சாக்கரம். இவ்விடமே சிற்றம்பலம் — தகராகாசம் — சிதம்பரம். இவ்விடத்தை அடைவது எளிதன்று. இவ்விடம் உபசாக நிட்டையாளர்க்கு எட்டாதது. இத்தகைய சிதம்பர தரிசனம் பெற்ற மெய்யடியார் பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கி அமிர்தத்துவம் என்னும் நித்தியத்துவம் பெறுவர். (திருவாசகம் கண்டபத்து செ. 6. பார்க்க.)

## ஔவை குறள்.

நெற்றிக்கு நேரேநிறைந்த ஒளிகாணில்
முற்று மழியா துடம்பு.

என்றுள் நமது கிழவி. நிறைந்த ஒளி— அமல ஒளி. சிதம்பர தரிசனம் என்பது. உடம்பு அழியாது என்பது. உடலுயிர் அமல மடைந்து சிவாங்கமாதலை உணர்த்தி நின்றது. இவ்வாறு வரும் பிரமாணங்கள் பல. விரிப்பிற் பெருகும்.

"கயிலாயம் என்னும் சுழிமுனை வீட்டில் ஓங்காரித்துக் கொண்டு தலைஎழுத்தாகி இருப்பது உணர்வு. அவை அசைவற நிற்கில் அதாவது அசைவு நிறை பெற்றாழி சிவமாம். நிறை பேதத்தால் சீவனும். மூச்சாகவும் பேச்சாகவும் சப்திப்பது சத்தி. இவையே பேசும் எழுத்து பேசா எழுத்து எனப் புகல்வது. பேசும் எழுத்து மனம். பேசா எழுத்து வாசி. சாகாக் கால் வேகாத் தலை போகாப் புனல் என மறை கூறும் வாசியாகிய வாயுவையும், ஆகாய வெளியையும் ஆவியாகிய வன்னியையும் எச் சமய மகான்களும் அடைய வேண்டி யிருக்கிறது" என்பது நிஜாநந்தபோதம். இதனால் சுழினையின் இயல்பும் பிறவும் நன்கு புலப்படுதல் கண்டு கொள்க.

இடை பின்கலை என்பன இரண்டும் ஒன்றே. வியாப்பியத்தில் ஒன்று. வியாபகத்தில் இரண்டு எனப் பேசப்படும். இவையே சத்தி சிவம், நாத விந்து, உடல் உயிர், உகர அகரம் எனப்படும். வியாப்பியமாகிய மகரமே தோற்ற ஒடுக்கங்களுக்கு இடமானது. யாவும் மகரத்தில் அடக்கம். இவையே பிரணவம். இதுவே சுழினை—ஆய்தம்—பதி—இடம்—ஞானாகாசம்.

### பட்டினத்தார்.

இடையாகிப்பின்கலையாய்எழுந்தசுழிமுனை[யாய்
உடலுயிராய்நீஇருந்தஉளவறியேன்பூரண[மே.

(ஷை புலம்பல்)

### முத்துத்தாண்டவர்.

“......இடைபின்கலையுநீரே ஏகப்ரம்மமும் [நீரே.........”

(ஷை கீர்த்தனம். செ. 26)

### கருவூரார் பூஜாவிதி.

எட்டிரண்டுமொன்றுமது வாலைஎன்பார்
இதுதானேபரிதிமதி சுழினைஎன்பார்
ஒட்டிமுறிந்தெழுந்ததுவேமுக்கோண[மென்பார்
உதித்தெழுந்த மூன்றெழுத்தைஅறியாரை[யோ
கொட்டுமொருதேளுருவாய் நிற்கும்பாரு
கூட்டமிட்டுப்பாராதே குறிகள்தோணும்
சுட்டசுடுகாடுமது வெளியுமாகும்
சொல்லுதற்குவாய்விளங்காச் சூட்சந்தா[னே.

(ஷை செ. 24)

அகர உகர மகர வடிவே — பிரணவ வடிவே இடை பின்கலை சுழிமுனை — சுழினை என்பது இதனால் நன்று புலப்படும். பிரபஞ்சக் கூட்டம் அற்ற இடம் — தஹிக்கப்படும் சுடுகாடு இதுவே. இது அகண்ட வெளி — சுத்தப்பாலை — ஞானாகாசம். இச்சுழினையே சித்தர்களால் மேரு எனவும் கயிலாயம் எனவும் கூறப்பட்டது. இஃதே அஃகாணி (அஃகேனம்) அக்காணி — ஆயுதம். இடை பின்கலைகள் அசுத்தம் நீங்கி அமலமடைந்து சுழிமுனையில் ஒன்றிய போது அமல பிரணவ வடிவம் எனப்படும் ஞானசத்தி வடிவம் உளதாகும். அசுத்த பிரணவ வடிவாய் அசுத்த அக்காணியாய் இருப்பது மருளுடம்பு. உரிய சாதகங்களால் இது கழிக்கப்படவேண்டும் — மாற்றப் படவேண்டும் “கயிற்றும் அக்காணி கழித்துக் காலிடைப் பாசம் கழற்றி” என்பது திருவாய் மொழி. கால் என்பது வாயு. இவையே இடை பின்கலையாம். அசுத்த ஆயுதமாகிய மருளுடம்பு அசுத்தம் நீங்கி விமல தேகமாய் (விதேகம்) வச்சிர ஆயுதமாய் (வழியடியானாகிய இந்திரன் “வச்சிர ஆயுதம்” உடையான் என்ப.) அமல ஆயுதமாகிய அமல பிரணவ வடிவமாகும் — ஞானசத்தி வடிவமாகும் என்க. அமிர்தத்துவ நெறியாகிய நித்தியத்துவ நெறி இதுவே என்க. இத்தன்மை வாய்க்கப் பெறுதல் மாற்றிப் பிறக்க வல்ல மெய் யடியார்க்கே யன்றி ஏனையோர்க்கு முடியாது. பின் வரும் ஔவையார் திருவாக்கு சுழினையின் இயல்பை நன்று வலியுறுத்துகின்றது.

### விநாயகர் அகவல்.

“............................
இடைபின்கலையின்எழுத்தறிவித்துக்
கடையிற்சுழிமுனைக்கபாலமுங்காட்டி...”

இத்தகைய சுழினையின் இயல்பு அறியாத உலகோர் சிலர், பலர்க்கும் யோகம் பயிற்றி அவரை முத்தி வாயிலில் சேர்த்து விடுவதாக விஞ்ஞாபனம் செய்து சீடரைச் சேர்த்து சுழினை என்று நெற்றியைத் தொட்டுக் காட்டிச் சில உபதேசம் புரிந்து காலம் கழிக்கின்றனர். நிறை முறை இல்லாத இன்னோரன்ன போலிச் சாதனைகளால் சரீரத்துள்ள பௌதிகங்கள் பேதப்பட்டுப் பரிதாபகரமான சாதல் அடைவதே யன்றி எம்பெருமான் திருவடி கண்டு நித்தியத்துவம் பெறுதல் முயற் கொம்பே யாகும். சற் குரவன் அருளா லன்றித் தத்துவப் பெரியார் பாடற் பொருளை—பரி பாஷைகளின் உண்மையை அறிதல் முடியாத காரியமே யாகும்.

### சட்டைமுனிகுருசூத்திரம்.

பார்த்துச்சிலநூல்பாடினனைக்கற்றுக்
காற்றைஅடைத்துக்கனயோகிஎன்று
சேர்த்துச்சீடரைச்செய்துபதேசம்
கூத்திதுவாகுங்கூடாதுமுத்தியே.

(ஷை செ. 20.)

இது காறும் கூறியவைகளால் புருவத்து இடை வெளி எனப்பட்ட சுழினை என்பது சீவர்கள் பக்குவங்களுக்கு ஏற்பவே அமையும் என்பதும் மெய்யடியார்க்குரிய இயற்கைச் சுழினையின் இயல்பும் ஒருவாறு உணரத்தகும்.

சுபம்

## “வித்தகம்”

### சந்தா விவரம்.

வருட சந்தா

உள் நாட்டிற்கு முன் பணம் ரூ. 3 0 0
வெளி நாட்டிற்கு ,, ,, ரூ. 4 0 0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

### “வித்தகம்”

விளம்பர விகிதம்

வியாபார விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 0—8—0
கோர்ட்டு விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 1—0—0

☞ நீடித்த விளம்பரங்களுக்கு தனி விகிதம்.

வித்தக நிலையம்
புதுச்சேரி.

# உண்மை முத்திநிலை ஆராய்ச்சி மறுப்பு.

"வித்தக"ப் பத்திராசிரியர் எழுதியது.

(தொகுதி 2. 9-ம் வாரத் தொடர்ச்சி.)

மத்த யானை அருள் புரிதல் என்பது மனம் எனும் வாசி வசப்பட்டமையை உணர்த்தி நின்றது. "மனமெனும் பெரிய மத்த யானையை என்வசம் அடக்கிடின்............ ஏழையேன் உலகில் நீடு வாழ்வன் ..........." எனத் தாயுமானவர் கூறியதும் அறிக. வாசி வசப் படுதலே — விமல காயம் பெறுதலே இந்து மதம் என்னும் சைவ மதம் சித்திக்கப் பெறுதலும் ஆம்.

"கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றே னாக அவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தனன்"

என இப் பெற்றி கைவரப் பெற்ற மணிவாசகர் அருளியதும் அறிக. (திருவாசகம் திருவண்டப் பகுதி) "ஆனை அருள் புரிந்தான்" என்னும் அரு மறையின் உண்மைப் பொருள் — இரகசியார்த்தம் இதுவே என அறிதற்பாற்று. "ஞான வாரணம் நல்குதி எனவே" எனக் குமர குருபரர் கூறியதும் அறிக. ஊன் உயிர் வேறு செய்தல் — உடலுயிர் மாற்ற மடைதல். "மாற்றிப் பிறத்தல்" என்னும் கட்டுரையை நோக்குக. ("வித்தகம்" தொகுதி 1 இல. 38.).

## திருமந்திரம்.

ஞானம் விளைந்தெழு கின்றதோர் சிந்தையுள்
ஏனம் விளைந்தெதி ரேகாண் வழிதொறும்
கூனன் மதிமண்ட லத்தெதிர் நீர்கண்டு
ஊன மறுத்துநின் றொண்சுட ராகுமே.

(ஷை 5ம் தந். 8வது ஞானம் செ.6)

[இதனால் மெய்யடியார் விமல தநுவில் — சந்திர மண்டலத்தில் ஊறும் அமுதம் ஊனத்தை அறவே ஒழித்தலும் அஃதாவது மாற்றுதலும் அவ் உடலம் ஒளி மயமாகிய அமலம் பெறுதலும் நன்று வலியுறுகின்றமை கண்டு கொள்க.]

கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுற மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கியுணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்குழல் சேர வொண்ணாதே.

(ஷை 7ம் தந். 12வது குருபூசை செ. 2)

[உரிய சாதகங்களால் ஊனை மாற்றி அதனால் அமல உணர்ச்சி சித்திக்கப் பெற்றாலன்றி அஃதாவது உடலுயிர் மாற்ற மடையப் பெற்றாலன்றி உலகியலாகிய போலிப் பூசைகளால் அருட்சத்தி பதிதலாகிய சத்தி நிபாதம்— ஞான சத்தி வடிவம் ஆக்க முறுதல் முயற் கொம்பே என்பது நன்று வலியுறுத்தப் பட்டது.]

ஆனை களைந் துமடக்கி யறிவென்னும்
ஞானத் திரியைக் கொளுவி யதனுட்புக்(கு)
ஊனை யிருளற நோக்கும் ஒருவற்கு
வானக மேறவழி யெளி தாமே.

(ஷை 8ம் தந். 3வது அவத்தைபேதம் 11 நின்மலாவத்தை [செ. 175)

[ஊனை இருளற நோக்குதல்— உரிய சாதகங்ளால் மருளுடம்பில் உள்ள அசுத்த நிறையை ஒழித்து அமல நிறை என்னும் அமல ஒளியை ஆக்கமுறச் செய்தல். வான் அகம் — ஞானாகாசம். மாற்றிப் பிறந்த தத்துவப் பெரியாரே அருளாய் வெளியாய் உலகு கண்டிட மறைந்து நித்தியத்துவம் பெற வல்லராவர் என்பது.]

மாலை விளக்கு மதியமு ஞாயிறும்
சால விளக்குந் தனிச்சுட ரண்ணலுண்
ஞானம் விளக்கிய நாதன்என் உள்புகுந்து
ஊனை விளக்கி யுடனிருந் தானே.

(ஷை 5ம் தந். 1வது சத்திநிபாதம் 4 தீவிரதரம் செ. 16)

[இதனால் "உற்ற ஆக்கையின் உறுபொருளாகிய — அமல ஒளி வடிவினனாகிய எம் பெருமான் விமல தநுவுள் குடி புகுந்து அதனை அமல மாக்கி அதனை விட்டுப் பிரியாது இருத்தலாகிய நித்தியத்துவம் கூறப்பட்டது. மதியம் ஞாயிறு என்பன உடலகத்துள்ள இடைகலை பின்கலைகளை உணர்த்தி நின்றன.]

## திருப்புகழ்.

"நான்என்பதற்றுயிரோடேன்பதற்றுவெளிநாதம்பரப்பிரமவொளி [மீதே
ஞானஞ்சுரப்பமகிழானந்தசித்தியொடேநாளும்களிக்கபதம் [அருள்வாயே."

குரு நாதன் விதிக்கும் விதிகளை வழுவறத் தாங்கி ஒழுகி வர வர முன்னிலைக் குருநாதன் தன்னிலையாவன். அஃதாவது தன்னுள்ளே காணப்படுவன் என்பது.

## அப்பர்தேவாரம்.

"தேடிக்கண்டுகொண்டேன் திருமாலொடுநான்முகனும்
தேடித்தேடொணாத்தேவனைஎன்னுள்ளே
தேடிக்கண்டுகொண்டேன்."

என்னும் அப்பர் சுவாமிகள் திருவாக்கானும், "காட்டினாய் கழுக்குன்றிலே" எனத் திருப் பாட்டிறுதி தோறும் கூறப்பட்ட மணிவாசகப் பெருமான் திருவாக்கானும் (திருவாசகம் திருக்கழுக்குன்றப்பதிகம்) இவ் உண்மை வெள்ளிடை மலையாம். அமல முதற்படி இதுவே என்க. இவ்வாறு தன்னுள்ளே குருதரிசனம் பெற்றதும் சீவன் முத்தி நிலை ஆரம்பமாகப் பெற்ற அப் பக்குவ சீவன் முறையே அமலப் படியேற்றம் பெற்றுத் தனது தூலம் அஞ்ஞான பௌதிக நிறையாகிய அசுத்த நிறை முற்றாக நீங்கப் பெற்று அள்ளூறுக்கையாய்ச் சூக்குமமாய் ஓ வடிவம் என்னும் பிரணவ மந்திர சரீரமாக மாறுதலால் சீவன் முத்தி நிலை பூரணப் பட்டுச் சதாசிவப் பேறடைந்து உலக குருவாகச் சிலகாலம் உலகில் வதிந்தோ உடனேயோ அவ்வடிவமும் கரைந்து அருளாய் வெளியாய் (ஞானகாச வடிவம்) உலகு கண்டிட மறைந்து நித்தியத்துவம் பெறுவான் — உண்மைச் சைவ முத்தி அடைவான் என்பது உண்மை நூற் றுணிபாகும். தன்னுள்ளே முன்னிலையாகக் காணப்பட்ட ஆசானும் தன்னுள் மறைந்த பின்னேயே தான் அவன் ஆகும் சமாதி கைகூடி "ஈனமில் காயம்" (திருமந்திரம்) என்னும் ஓ வடிவம் உளதாகும். இவ் வடிவம் பார்ப்பவர் கண்களுக்குத் தூலமாகத் தோன்றும், அஃதாவது பரிசனத்துக்குப் புலப்படாது (கையால் பிடிக்க முடியாது என்பது) தரிசனத்துக்கே புலப்படும் என்பது. இத் தன்மை வாய்ந்த சீவன் முத்தர் ஊனங்கள் ஒன்றும் இன்றி நித்தியானந்தராய் வதிவர். பின் வரும் பிரபல சுருதிப் பிரமாணம் இவ் வுண்மையை நன்று வலியுறுத்தும்.

## திருமந்திரம்.

அண்ண லிருப்பிட மாரு மறிகிலர்
அண்ண லிருப்பிட மாய்ந்துகொள் வார்களுக்(கு)
அண்ண லழிவின்றி யுள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணி லவனிவ னாமே.

(ஷை 9ம் தந். 2வது ஞானகுருதரிசனம் செ. 5)

[அண்ணல்—சோதிப் பிழம்பு வடிவினனாகிய ஆரியன்—சிவம். இருப்பிடம்—நாத அந்தமாகிய வேத அந்தம். அண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும் என்பது அந்தத்தை அணவிய சீவன்முத்தர் உடலை விட்டுப் புறப்பட்டுப் போகான் புரிசடையோன் என்னும் பொருளுடையது. அவன் இவன் ஆதல் — தான் அவன் ஆகும் சமாதி கைகூடுதலால் நாத அந்தமாகிய வேதாந்தமும் சித்து அந்தத்தை அடைதல், அஃதாவது சித்து என்னும் உயிர் அந்தமாகிய சிவத்திற் கலந்து ஒன்றாய் நிற்றலாகிய சித்தாந்தமும் சமரசம் பெறுதலை — வாய்மையான வேதாந்த சித்தாந்த சமரசத்தை உணர்த்தி நின்றது.

ஆமாறிற் சிவனா ரருள் பெற்றுளோர்
போமலந் தன்னால் புகழ்விந்து நாதம்விட்(டு)
ஓமய மாகி ஒடுங்கலி னின்மலம்
தோமறு சுத்தாவ வத்தைத் தொழிலே.

(ஷை 8-ம் தந். 3வது அவத்தை பேதம் (5 கேவலசகல சுத்தம் செ. 7)

[விந்து நாதம் விட்டு ஓ மயமாகி — விந்து நாதம் எனப்படும் உயிராகிய சித்தும் உடலென்னும் வேதமும் அந்தத்தை அடைதலால் — வேதாந்த சித்தாந்த சமரசம் பெறுதலால் அமல ஓங்கார வடிவமாகி என்பது — பிரணவ சரீரம் பெற்று என்பது. நின்மலம் — நின்மல அவத்தை. இதுவே சுத்த அவத்தை என்பது. நின்மல துரியாதீதம் நிகழுங்கால் ஞானாகாசத்தில் ஒடுக்கம் நிகழும்.

மலதநு வாகிய மருளுடம்பினராய் வீற்றிருந்து நூல் இயற்றினோர் சிலரைச் "சாக்கிரத்தே அதீதத்தைப் புரியும்" சீவன் முத்தர் எனச் சில வித்துவான்கள் விளம்பி விட்டனரே எனின், அது வேத உண்மைகளை ஒரு சிறிதும் அறியாதார் போலிக்கூற்றே என்பது வெள்ளிடை மலையாம். நின்மல சாக்கிர நிலை கைவரப் பெற்ற தத்துவப் பெரியார் பிரணவதநு நிலத்துள் மூடி வைக்கும்படி — புதைத்து விடும் படி பிணமாகி விழும் என்பது அசம்பாவிதமே யாகும். அவத்தை இயல்புகள் அமயம் நேர்ந்துழி விளக்கமுற உரைக்கப்படும்.

## திருமந்திரம்.

தானவ னாகுஞ் சமாதிகை கூடினால்
ஆன மலமறு மப்பசுத் தன்மைபோம்
ஈனமில் காய மிருக்கு மிருநிலத்
தூனங்க ளெட்டு மொழித்தொன் றுவோர்கட்கே.

(ஷை 8 ம் தந். 3வது அவத்தைபேதம், நின்மலா வத்தை செ. 17)

(இ—ள்) ஊனங்கள் எட்டும் ஒழித்து ஒன்றுவோர் கட்கு — வினைப் போக தேகமாகிய மருளுடம்புக் குரிய குற்றங்கள் எட்டையும் (வாய்மையான சாதக. யோகங்களால்) நீக்கி (மாற்றி) மதியாகிய பதியோடு ஒன்றும் முத்தி நெறியில் நிற்கும் மெய்யடியார்க்கு, தான் அவன் ஆகும் சமாதி கை கூடினால் — சீவன் சிவமாதலாகிய வாய்மையான சமாதி நிலை கைகூடப் பெறுங்கால், ஆன மலம் அறும் — அநாதியாகவே பொருந்தி யுள்ளதாகிய மும்மலமும் ஒழியும், அப் பசுத் தன்மை போம் — அம்மல சம்பந்தத்தாலாய சீவத்துவம் கெடும், இருநிலத்து ஈனமில் காயம் இருக்கும் — (மலம் அமலமாகப் பெற்றமையால்) வியாபகமாகிய இப் பிரபஞ்சத்தின் கண் "ஈன

மில் காயம்" எனப்படும் ஓ வடிவம் என்னும் பிரணவ மந்திர சரீரம் குரு வடிவாகி விளங்கும் என்பதாம்.

தான் அவனாதலே வாய்மையான சமாதி என அதன் இலக்கணம் இம் மந்திரத்தால் வரையறுத்துக் கூறப் பட்டது. இப் பெற்றி கைகூடப் பெறுவார் யாவர்? எனின், அவர் தாம் குரு வருளால் பெறப்படும் வாய்மை யான சாதக யோகங்களை வழுவற அநுட்டித்தலால் ஊனங்கள் எட்டையும் ஒழித்து பதியோடு ஒன்றி முத்தி நெறி நிற்போர் என்று கூறப்பட்டது. ஊனம் என்றால் என்னை? ஊனோடு தொடர் புடையது ஊனம் எனப்படும். ஊன் என்பது வினைப் போக தேகமாகிய அசுத்த தநுவைக் குறித்தது. அதனைப் பற்றிய அழுக்கே— குற்றமே ஊனங்கள் எட்டு எனப்பட்டன. அவை தாம் பிறப்பு, வளர்ச்சி (அசுத்த நிறையின் ஆக்கம்) பசி, பிணி, நரை, திரை, மூப்பு, சாக்காடு எனப்படும். அழுக்கை அழுக்கால் அகற்றுதல் என்னும் உபாயத்துக்கு ஒப்ப குரு வருளால் முன்னிலைகளை நிறை கண்டு பஞ்சீகரணி த்தவர்க்கே— நிறை முறையான அருந்தல் பொருந்தல் கைவரப் பெற்றவர்க்கே ஊனங்கள் எட்டும் ஒழியும். இவ்வாறு இவற்றை ஒழித்தவரே பதியோடு ஒன்றுதலாகிய அமல முதற்படி கண்டு முத்தி நெறி நிற்பவராவர். இவரே விமல தநுவுடைய வழியடியார் எனப்படுவர். மும்மல காரியமாகிய முப்புரம் என்னும் அசுத்த தநு மாற்றமடைதலே மலம் அறுதல் என்பது. சீவத்துவம் கெடுதலே பசுத்தன்மை நீங்குதல் என்பது. சாதலுறாச் சாதல் என்பது இதுவே யாம். "ஊனமில் காயம்" என்பது ஊனங்கள் அறவே ஒழிந்த அமல தநு— பிரணவ மந்திர சரீரம். இது ஊனங்கள் அறவே ஒழிந்தமையால் நிழற் சாயை இல்லாதது; பார்வைக்கே புலப்படுதலால் உருவம் உடையது போலவும், பரிசத்துக்குப் புலப்படாமையால் அருவம் எனவும் நிற்றலால் அருவுருவத் திருமேனி எனப் படும் குரு வடிவாகிய சதாசிவ வடிவம் இதுவே என அறிதற் பாற்று. இதுபற்றியன்றோ,

### சிவவாக்கியர் பாடல்.

"ஊன மற்ற காயமாய் இருப்பன் எங்கள் ஈசனே"

(ஷை செ. 20)

என அருளிச் செய்தார் சித்தர் பெருமானாகிய சிவவாக்கியர் என அறிக.

### திருவாசகம்.

"...............................................................<br>
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை<br>
என்னையும் இருப்ப தாக்கினன்................................"

(ஷை திருவண்டப்பகுதி)

என மணிவாசக சிவம் அருளியதும் அறிக.

ஓ வடிவம் என்னும் அமல தநுவுடைய சீவன் முத்தரே யன்றி ஏனைய மருளுடம்புடைய சீவர்கள் இவ்வாறு இருத்தல்— நித்தியத்துவம் பெறுதல் முயற் கொம்பே என்பது சொல்லாமலே அமையும்.

### திருமந்திரம்.

நந்தி யருளாலே மூலனை நாடிப்பின்<br>
நந்தி யருளாற் சதாசிவ னாயினேன்<br>
நந்தி யருளான்மெய்ஞ் ஞானத்து ணண்ணினேன்<br>
நந்தி யருளாலே நான் இருந்தேனே.

(ஷை பாயிரம் 6-வது திருமூலர் வரலாறு செ. 20)

இதனால் திருமூலர் "ஊனமில் காயம்" எனப்படும் ஓ வடிவம் பெற்று உலக குருவாய்— சதாசிவ மூர்த்தியாய் வீற்றிருந்து அரிய மறைகளை அருளிச் செய்தமை நன்று பெறப் படுகின்றது. எம் பெருமானே ஒவ்வோர் அவசரத்தில் நந்தி எனவும் மூலன் எனவும் காலன் எனவும் விளங்குகின்றான் என்பது வேத உண்மை. நிறை விண்டால்— அற்றால் காலன்; நிறை கொண்டால் காலன் மூலன் ஆகின்றான்.

### அப்பர் தேவாரம்.

நடுவிலாக்காலன்வந் துநணுகும்போ தறியவொண்ணா<br>
அடுவனவஞ்சுபூதமவைதனக்காற்றலாகேன்<br>
படுவனபலவுங்குற்றம்பாங்கிலாமனிதர்வாழ்க்கை<br>
கெடுவதிப்பிறவிசீசீகிளரொளிச்சடையினீரே.

(ஷை தனித்திருநேரிசை—செ. 10)

[இதனால் நிறை தழுவா நிலையே காலன் என்பதும் அதனாற்றான் ஊனங்கள் உளவாகின்றன என்பதும் நன்று பெறப்படுகின்றன. அஞ்சு பூதம் = நிறை பேதித்து நிற்கும் சரீர பௌதிகங்கள்.]

உண்மை இவ்வாறாக, ஓ வடிவம் பெறும் பக்குவம் பெறாது மாண்டு போன மருளுடம்பினரைச் சீவன்முத்தர் எனப் போற்றுவார் அறியாமையை என்னென்று கூறுவது?

பின் வரும் பிரமாணங்களும் "தான் அவன் ஆகும் சமாதி" கைகூடிய சீவன் முத்தர் வடிவமாகிய பிரணவ மந்திர சரீர இலக்கணத்தை நன்று புலப்படுத்துதல் கண்டுகொள்க.

### சுத்தசாதகம்.

அருள்வடிவதுவேபார்வையிற்றெருக்கி<br>
லகப்படாதென்றுநின்றிலகும்<br>
மருள்வடிவதுவேபார்வையிற்றெருக்கில்<br>
வந்தகப்பட்டுநின்றிலகும்<br>
அருள்மருள்நடுவாம்ஓவடிவதுவே<br>
யகப்படும்பார்வையொன்றுக்கே<br>
மருள்வடிவுலகும்ஓவடிவோர்க்கு<br>
ளாய்த்திடும்பார்வையொன்றுக்கே.

(ஷை செ. 73)

பரமுத்தர்க் குரிய அருள் வடிவம் பார்வைக்கும் பரிசத்துக்கும் புலப்படாது. சீவர்களுக்குரிய மருள் வடிவம் பார்வைக்கும் பரிசத்துக்கும் புலப்பட்டு நிற்கும். அருள் வடிவுக்கும் மருள் வடிவுக்கும் இடையில் உள்ளதாகிய சீவன் முத்தர்க் குரிய ஓ வடிவமானது (அமல பஞ்சாக்கர தேகமாகிய பிரணவ சரீரம்) பார்வை ஒன்றுக்கே புலப்படுவதாகும். சீவர்களுக்கு மருள் வடிவாயிருக்கும் இப் பிரபஞ்சமானது சீவன் முத்தர்க்குப் பார்வை ஒன்றுக்கே புலப்படுவதாயிருக்கும் என்பது இதன் பொருளாகும். பின் வரும் செய்யுள் அத்தகைய தோற்றத்தின் இயல்பை உபமான முகத்தால் விளக்குகின்றது.

சுத்தசாதகம்.

பழுதையிற்கிளிஞ்சில்கட்டையினின்றும்
பாம்பும்வெள்ளியுங்கள்வனும்போல்
எழுதருமாரோபிதமதிட்டான
மிலங்கிடிலிலாததுபோலும்
முழுதுணர்சிவம்வந்துதித்தவிச்சீவன்
முத்தருக்குலகமின்றுதித்தல்
கழுதிரதம்போற்காட்சிமாத்திரமாய்க்
கவும்விவகாரமேயின்றாம்.

(செ. 74)

கயிறு கிளிஞ்சில் கட்டை என்னும் அதிட்டானப் பொருள்களில் மயக்கத்தால் ஆரோபிக்கப்பட்ட பாம்பு வெள்ளி கள்வன் என்னும் பொருள்கள், அவ் அதிட்டானங்களின் உண்மை விளங்கப் பெற்றபோது. அவ் ஆரோபிதப் பொருள் எவ்வாறு பொய்யாகுமோ, அவ்வாறே சர்வாதிஷ்டானமான சிவம் என்னும் உண்மைப் பொருளைக் கண்ட சீவன் முத்தருக்கு ஆரோபிதமான பிரபஞ்சம் வாய்மையாகத் தோன்றாது கானற் சலம்போலக் காட்சி மாத்திரமாயே தோன்றுவதாகும்; விவகாரத்துக்கு உரிமையாகாது என்பது இதன் பொருளாகும். "நேஹ நா நா அஸ்தி கிஞ்சன" என்னும் சுருதியின் பொருளும் ஈண்டு நோக்கற்பாலது. (நஇஹ நா நா அஸ்தி கிஞ்சன= இவ் வுலகத்தில் அநேகம் என்பது சிறிதேனும் இல்லை. பிரமம் ஒன்றே இருக்கிறது. அதிஷ்டான ஆன்மாவின் கண் சிறிது மாத்திரையும் துவைதப் பிரபஞ்சம் இன்றாம். மற்றோ அதிஷ்டான ஆன்ம ரூபமாம் என்பது வேத உண்மை. பாசமே ஞானமாய்ப் பயன் படும் என்பதன் பொருளும் இதுவே. இவ்வாறான உண்மைத் தோற்றம் ஓ வடிவ முடைய சீவன் முத்தர்க்கே யன்றி மருளுடம்பினராகிய சீவர்களுக்கு உரியதன்று. இவ் வுண்மைகளை அறியாத சீவர் சிலர் தம்மை வேதாந்திகள் எனவும் தமக்குப் பிரபஞ்சம் கானற் ச்லமாகத் தோன்றுகிறது எனவும் கூறி அமைதல் உலக மாக்களை ஏமாற்றும் போய்க் கூற்றேயன்றி வேறன்று.

சுத்தசாதகம்.

சொற்பனமதனிற்கனவிதென்றிடுமோர்
சொப்பனசாக்கிரநடுவே
நிற்பனபோலுமருண்மருணடுவே
நின்றிடும்பிரணவவடிவம்
சிற்பரசீவன்முத்தனவ்வடிவாய்ச்
செகமிதுஞ்சிவமதுந்தோன்ற
நிற்பனதனக்குநிழலின்றிநிழல்போ
னிலத்தடியின்றியேநிகழும்.

(செ. 76)

இதனால் அருள் வடிவுக்கும் மருள் வடிவுக்கும் இடையில் உள்ளது பிரணவ வடிவம் என்பதும், அது நிழற் சாயை இல்லாதது என்பதும், நிழற் சாயை போலப் பூமியில் தொடர்பின்றிச் சஞ்சரிப்பது என்பதும் நன்று புலப்படுகின்றன. "சாயா புருடனைப் போல" எனத் திருமந்திரம் கூறியதும் அறிக. "சாயா யாக்கை" எனப்படுவது இதுவே. இவ் வடிவம் உடைய சீவன் முத்தர் இயல்பை உலக மாக்கள் கண்டு பிடிப்பது முடியாத காரியம். உலக மாக்கள் அறிய முடியாதவாறு நிழற்சாயையோடு தூலம் காட்டிப் பாமரரோடு பாமரர்போல் வதிந்து படியேற்றம் பெறும் அளப்பில் ஆற்றல் சீவன் முத்தர்க்கு உண்டு. இவ் வடிவமே அருளாகிக் கரைந்து உலகு கண்டு போற்ற ஞானகாசத்தில் மறைவதாகும். பின் வரும் பிரபல சுருதி இவ் உண்மையை நன்று வலியுறுத்துகின்றது.

திருமந்திரம்.

அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்
எழுகின்ற தீயிற்கர்ப் பூரத்தையொக்கப்
பொழிகின்ற இவ்வுடல் போம் அப்பரத்தே.

(ஷை 8ம்-தந். விசுவக்கிராசம் செ. 1)

(இ-ள்) நீர்க் குமிழியானது நீரிலே தோன்றி அதனுள் மறைந்து தன் சொரூபம் கெட்டது போல, சரீரத்தாலான நிழற் சாயையானது அச் சரீரத்தின் வேறாகத் தோன்றுவ தென்ப தழிந்து சரீரத்தோடு உறவு செய்து அச் சாயை என்னும் நாமமும் ரூபமும் அழிந்த போது, கொளுத்தப் பட்ட தீக் கொழுந்தினால் கற்பூரமானது தன் இருப்புச் சிறிதும் இன்றி முற்றாகக் கரைந்து ஒடுங்குவது போல, அருட் சோதியால் விழுங்கப்பட்டு அருளாகிக் கரைதலால் அருளொளியைப் பொழிகின்ற இத்தகைய உடலம் (அருள் வடிவம்) ஞானகாசத்தில் ஒடுங்கும் என்பது இதன் பொருளாகும்.

(தொடரும்.)

Imprimerie "VITTAGAM"— Pondichery.

Le Gerant. R. Nagarattinam